வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 61/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 02.08.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைராஜ் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1, 4 முதல் 6 ஆஜர், 2ம் எதிரி ஆஜராகவில்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3ம் எதிரி வழக்கு SC 76/2021 ஆக நிலுவையில் உள்ளது.)

**முதல் விசாரணை**

நான் வெள்ளவேட்டில் குடியிருக்கிறேன். நான் வெள்ளவேட்டில் கூல்டிரிங்ஸ் கடை வைத்துள்ளேன். அசா 2 எனது அண்ணி. 10, 11 வருடங்களுக்கு முன்பாக ஆனி 1ம் தேதிக்கு முன்பாக சுமார் வாரத்திற்கு இரவு 8.30 மணியளவில் எனது அண்ணன் தங்சாமியை அடித்துவிட்டார்கள் என எனக்கு தகவல் வந்தது. எனது கடையை முடிவிட்டு நான் செல்வதற்குள் ஆட்டோவில் எதிரே எனது அண்ணனும், அண்ணன் மகனும் வந்தார்கள். ஆட்டோவில் நானும் ஏறிக்கொண்டேன். எனது அண்ணனுக்கு தலையில் இரத்த காயம் இருந்தது. பிறகு அவர் தனது காலை தட்டி காண்பித்த பிறகு தான் காலில் இருந்த காயத்தை கவனித்தோம். இராமசந்திர மருத்துவமனைக்கு அவரை அழைத்து சென்றோம். ஒரு வாரம் கழித்து அவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளில் முருகன், கார்த்தி, மற்றும் ஐசக் உள்ளார்கள் மற்றொருவர் பெயர் ஞாபகம் வரவில்லை. எனது அண்ணனை எதிரிகள் அடித்து விட்டதாக கேள்வி பட்டேன். ஐசக்கின் தகப்பனாரும் எனது அண்ணனும் நல்ல பழக்கத்தில் இருந்தார்கள். லோடு

அடிப்பது சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை இருந்ததாக சம்பவம் நடந்தபிறகு கேள்விபட்டேன்.

**(வழக்கறிஞர் ஆஜரில் இருந்தபோதும் குறுக்கு விசாரணை செய்யவில்லை)**

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 61/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 02.08.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரசிகாமணி | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1, 4 முதல் 6 ஆஜர், 2ம் எதிரி ஆஜராகவில்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3ம் எதிரி வழக்கு SC 76/2021 ஆக நிலுவையில் உள்ளது.)

**முதல் விசாரணை**

அசா 1 மணிகண்டன் எனது மகன். நான் வெள்ளவேட்டில் வசிக்கிறேன். தற்போது வீட்டில் தான் இருக்கிறேன். அதற்கு முன்பாக வெள்ளவேட்டில் மளிகை மற்றும் ஜெராக்ஸ் கடை வைத்திருந்தோம். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு எனது மகளுக்கு கல்லியாண பேச்சு நடைப்பெற்ற காரணத்தினால் எனது மகளையும் எனது கணவரையும் கடையிலிருந்து வீட்டிற்க்கு அனுப்பிவைத்தேன். எனது மகளை எனது கணவர் வீட்டில் விட்டுவிட்டு ஒரு நபரிடமிருந்து பணத்தை வாங்கவேண்டும் என கூறிவிட்டு எனது கணவர் சென்றுவிட்டார். எனது கணவர் திரும்பி வரும் சமயத்தில் அவர் அடிப்பட்டு குத்தம்பாக்கம் ரோட்டில் கிடந்தார். எங்கள் கடை வழியாக சென்றவர் அவர் அடிப்பட்டு கிடக்கும் விவரத்தை என்னிடம் கூறினார். நானும் எனது மகனும் அந்த சமயத்தில் கடையில் இருந்தோம். அடிப்பட்டு கிடந்த எனது கணவரை ஆட்டோவில் ஏற்றி கொண்டு இராமச்சந்திர மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 10 நாட்கள் கழித்து என் கணவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை அவர்களது

சிறுவயதிலிருந்தே எனக்கு தெரியும். நாங்கள் குடியிருக்கும் வீட்டு பக்கம் தான் அவர்களும் குடியிருக்கிறார்கள். ஐசக்கின் தகப்பனார் எங்களது மகளின் நிச்சயதார்த்தா பொருட்களை வீட்டில் கொண்டுபோய் வைப்பதற்காக எனது கணவர் கொடுத்த பணம் போதவில்லை என சம்பவம் நடப்பதற்கு 35 நாட்களுக்கு முன்பாக என் கணவரிடம் பிரச்சனை செய்தார். என் கணவர் அதன் காரணமாக கூடுதல் பணம் ஐசக்கின் தகப்பனாரிடம் கொடுத்தார். அதன்பிறகு ஐசக்கின் தகப்பனாருக்கு நாங்கள் லோடு அடிக்கும் வேலை கொடுக்கவில்லை எனவே ஐசக்கின் தகப்பனார் எங்கள் வீட்டு வாசலில் அவரது இயற்கை கழிவுகளை செய்ய ஆரம்பித்தார். இது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வெள்ளவேடு காவல் நிலையத்தில் ஆய்வாளர் துரைபாண்டி முன்னிலையில் என் கணவர் கையொப்பம் செய்துவந்தார். இந்த நிலையில் 30 நாட்கள் கழித்து எனது கணவரை ஐசக் மற்றும் அவரது கூட்டாளிகள் கொன்றுவிட்டார்கள் என சந்தேகப்பட்டு காவல் நிலையத்தில் சொன்னோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(வழக்கறிஞர் ஆஜரில் இருந்தபோதும் குறுக்கு விசாரணை செய்யவில்லை)**

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 61/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 02.08.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1, 4 முதல் 6 ஆஜர், 2ம் எதிரி ஆஜராகவில்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3ம் எதிரி வழக்கு SC 76/2021 ஆக நிலுவையில் உள்ளது.)

**முதல் விசாரணை**

எனது தகப்பனார் பெயர் தங்கசாமி. நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். வெள்ளவேடு பகுதியில் நாங்கள் மளிகை கடை வைத்துள்ளோம். சுமார் 11 வருடங்களுக்கு முன்பாக ஆகஸ்ட் மாதத்தில் மாலை 07 மணியளவில் நானும் எனது தாயார் ரசிகாமணி கடையில் இருந்தோம். எனது தந்தை 200 மீ. தொலைவில் உள்ள எங்கள் வீட்டில் இருந்தார். எனது தகப்பனார் வெள்ளவேட்டில் உள்ள குத்தம்பாக்கம் சாலையில் அடிப்பட்டு கிடப்பதாக ஒரு நபர் வந்து சொன்னார். அந்த இடத்திற்கு நான் முதலில் சென்றேன். அங்கே கூட்டமாக இருந்தது. எனது தகப்பனார் அடிப்பட்டு கிடந்தார். அவரது தலையில் இரத்தம் வடிந்தது. மயக்கமாக கிடந்தார் எனது அம்மா அதற்குள் வந்துவிட்டார். ஆட்டோவில் என் தகப்பனாரை ஏற்றி கொண்டு ராமச்சந்திரா மருத்துவ மனைக்கு அழைத்து சென்றோம். அவருக்கு காலில் அடிப்பட்டு இரத்தபோக்கு இருந்ததை நாங்கள் கவனிக்க வில்லை பிறகு அவர் காலை தொட்டு காண்பித்த பிறகு காலை உயரமாக வைத்து மருத்துவமனைக்கு

அழைத்து சென்றோம். மருத்துவமனையில் அவரை உள்நோயாளியாக அனுமதித்தார்கள். ஒன்பது நாட்களுக்கு பிறகு அவர் இறந்துவிட்டார். சம்பவம் நடந்த மறுநாள் வெள்ளவேடு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். எனது வழக்கறிஞர் புகாரை எழுதினார். காண்பிக்கப்பட்ட புகார் நான் கொடுத்தது. அது **அதசாஆ 1**. சம்பவம் நடப்பதற்கு ஒரு மாததற்கு முன்பாக ஐசக் தகப்பனார் மணி எனது தகப்பனாரை அடித்த பிரச்சனை காரணமாக அவர்கள் எனது தகப்பனாரை கொன்றுவிட்டார்கள். என் தகப்பனாருக்கு வேறு யாரும் எதிரிகள் கிடையாது. இன்று ஆஜரில் உள்ளது ஐசக், சந்துரு, முருகன், கார்த்தி ஆகும். எனது தகப்பனார் ஆட்டோவில் மயக்கமாக தான் இருந்தார். போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்

**(வழக்கறிஞர் ஆஜரில் இருந்தபோதும் குறுக்கு விசாரணை செய்யவில்லை)**